[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 டிசம்பர் 15

தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(4) கவன ஈர்ப்பு

(அ) திராவிட முன்னேற்றக் கழக முன்னணி உறுப்பினர்களின் கடைகள் சூறையாடப்பட்டதன் காரணமாக திருச்சிராப்பள்ளி நகருக்குள்ளும் வெளியிலும் நிலவும் பதட்டநிலை குறித்து.

THIRU V. M. ABDUL JABBAR: Sir, I wish to call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, namely, the tension prevailing in and around Tiruchirappalli Town subsequent to the looting of the shops belonging to leading members of D.M.K.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 11—12—72 அன்று திருச்சியில் மாணவர்களுடைய ஊர்வலமும், அர்த்தாலும் நடைபெற்று மாணவர்கள் கூட்டம் பிற்பகல் சுமார் 1-30 மணிக்கு முடிந்த பின்பு சில வன்முறைச் செயல்கள் நிகழ்ந்துள்ளன. பிற்பகல் சுமார் 2 மணிக்கு சுமார் 50 பேர் கொண்ட கூட்ட மொன்று இஸ்மாயில் பார்க்கில் இருந்து புறப்பட்டு மெயின் கார்ட் கேட் அருகிலுள்ள போக்குவரத்து மரக்குடைக்கு பெட்ரோல் ஊற்றித் தீயிட்டனர்.

பிறகு அந்தக் கூட்டம் திருச்சி நகர 29-வது வட்ட தி.மு.க. கிளைச் செயலாளர் திரு. பி. எல். எஸ். சிங்காரம் அவர்களுக்கு உரிமையான "அன்பு லாட்ஜ்" என்ற கட்டடத்தைத் தாக்கினர். அந்தக் கட்டடம் பூட்டப்பட்டிருந்தாலும் கூட அதன் கதவுகள் இடைவெளி கொண்ட கதவாக (கொலாப்ஸிபில் கேட்டாக) இருந்த காரணத்தால் அந்தக் கதவுகளின் மூலமாக கற்களை எறிந்து கண்ணாடி சன்னல்களையும், படங்களையும், சேதப்படுத்தினர். இந்தத் தாக்குதலின் விளைவாகச் சுமார் ஓர் ஆயிரத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

1972 டிசம்பர் 15] [டாக்டர் மு. கருணாநிதி]

பிறகு இந்தக் கூட்டம் தி.மு.க.வில் முக்கியப் பிரமுகர்களான திரு. பி. பாண்டுரங்கன், திரு. பி. கஸ்தூரி ரங்கன் ஆகியவர்களுக்கு உரிமையான "நாதன் அண்டு கம்பெனி" என்ற கட்டிடத்தைத் தாக்கினர். அந்தக் கட்டிடம் பூட்டப்பட்டிருந்தாலும் கூட பூட்டை உடைத்து கட்டிடத்திற்குள் கூட்டத்தினர் சென்று அங்கிருந்த கழகத் தலைவர்களின் படங்களையும் மற்றப் படங்களையும் மற்றுமுள்ள பொருள்களையும் உடைத்துச் சேதப்படுத்தினர்.

அதன் பிறகு திருச்சி நகர தி.மு.க. செயலாளர் எஸ். ஏ. ஜி. ராபி அவர்களின் ஒலிபெருக்கிக் கடையைத் தாக்கினர். இந்தக் கடை பூட்டப்பட்டிருந்தது. ஆனால் கூட்டத்தினர் பூட்டை உடைத்து உள்ளே சென்று அங்கிருந்த ஒலிபெருக்கிக் கருவிகள், படங்கள், தொலைபேசி, மற்றப் பொருள்களை யெல்லாம் உடைத்து நாசப்படுத்தினர். மேலும் அங்கிருந்து ஏராமான பொருள்களைச் சூறையாடிச் சென்றனர். இந்த தாக்குதலின் விளைவாக 74 ரிக்கார்டுகள், 2 ஒலி பெருக்கி மைக்குகள், 1 ஆம்பிளிஃபையர், ஒரு ரிக்கார்ட் பிளேயர் ; 30 சீரியல் விளக்கு செட்டுக்கள் ஆகியவை திருடு போய்விட்டதாகத் தெரிகிறது. இந்தத் தாக்குதலின் விளைவாக சுமார் ரூ. 10,000 நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அதன் உரிமையாளர்கள் புகார் கொடுத்துள்ளார்கள். இந்தப் பல்வேறு வன்முறைச் செயல்களுக்கும் போலீசார் வழக்குகள் பதிவு செய்து இதுவரை 12 பேர்களைக் கைது செய்துள்ளார்கள். "ராபி" கடை தாக்குதலில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. வழக்குகள் புலன் விசாரணையில் இருக்கின்றன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, திருச்சி போன்றிருக்கிற பெரிய நகரிலேயே தொடர்ச்சியாக, 3, 4 இடங்களில் வன்முறையாளர்களால் கட்சிக்காரர்கள் தாக்கப்பட்டும் காவலர்கள் அதைத் தடுக்காதது எங்களுக் கெல்லாம் பெருத்த அச்சத்தைத் தருகிறது. அது மாத்திரமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள், அச்சுறுத்தப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். காவலர்களும் தாங்கள் பலமான குறைபாடுகளுக்கு ஆளாகிவிட்டதனால், இம்மாதிரியான விஷயங்களில் ஒதுங்கி நிற்கின்றார்களோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. இந்த அச்சத்தைப் போக்க, இம்மாதிரிச் சம்பவங்களில், அரசு காவலர்களுக்கு தக்க தாக்கீது பிறப்பிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முதலமைச்சர் அவர்களுக்கு விடுக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது போன்ற வன்முறை வெறியாட்டங்களில் வன்முறையாளர்கள் ஈடுபடுகின்ற பொழுது போலீசார் அவ்வப்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்றார்கள். ஆனால், சில நேரங்களில், சில இடங்களில், திடீரென்று, மின்னல் வேகத்திலே, இம்மாதிரி நடைபெறுவதால், போலீசாரால் அவைகளைத் தடுக்க முடியவில்லை. எதிர்பாராது நடைபெறும்போது கண்காணிப்பைச் செய்வதற்கு இயலாத நிலையிலேதான் போலீசார் இருக்கிறார்கள். ஆனால், நிகழ்ச்சிகள் நடைபெற்ற சில இடங்களிலே, மீண்டும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அந்த இடங்களிலே, தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள். சாதாரணமாக, போலீசார் இங்கே இன்னது நடைபெறும் என்று நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் இன்னின்ன இங்கிங்கு நடைபெறும் என்று முன்கூட்டியே போலீசார் அறிந்துகொள்வது எல்லா நேரங்களிலும் இயலாது என்பதை நாம் மறந்திட முடியாது.

ஊர்வலம் நடந்து, அது கலைந்து சென்ற பிறகு, வன்முறையாளர்கள் சிலபேர் திட்டமிட்டு இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். பெரிய கலவரங்கள் செய்தல், திருட்டு, கொள்ளை என்கின்ற அளவுக்கு திருச்சி நகரத்திலே இந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது. போலீசார் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் மீது வழக்குகள் தொடரப்படும் என்று மாமன்றத்திற்கு உறுதி அளிக்கின்றேன்.

(ஆ) சென்னை நகரில் ஏற்பட்ட மர்ம வெடிவிபத்தும் அதன் விளைவுகளும் குறித்து.

THIRU M. A. LATHEEF : Sir, I wish to call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, namely, the mysterious explosion of a bomb of a mysterious type in Madras City and the consequent death of a lady and the serious injuries to many.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ராயபுரம், பழைய ஆட்டுத் தொட்டிச்சாலை (ஸ்லாட்டர் ஹவுஸ்